தென்னைப் பயிர்ச்செய்கை சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 48 இன் படி தேவைப்படுகின்ற அல்லது அங்கீகாரம் அளிக்கப்பட்ட போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றிற்கொன்று எதிரீடு செய்யக்கூடாத போதிலும், ரூபா 34,324,005	இந்த கணக்கீட்டு வழு 2023 ஏற்பட்டிருந்ததுடன், அங்கு நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகில் அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 3,806,537 தொகை மற்றும்	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இற்கான குறுகிய கால ஒதுக்கீடு மீதியில் ரூபா 1,333,912 இற்கான வரவு மீதியொன்றும் அடங்கியிருந்தமையால், நிதிக்கூற்றுக்களில் குறுகிய கால ஒதுக்கம் அந்தப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	தலைமை அலுவலகத்தின் முன்பக்க உருக்கு கட்டமைப்புசார் பகுதியொன்று சேர்ப்பதற்காக ரூபா 10,679,161 தொகையாக மொத்தப் பெறுமதி ரூபா 14,485,699 தொகையாகும். அவற்றில் 2024 ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதாவது நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகின் அலுவலக கட்டிடத்திற்காக ரூபா 3,806,537 தொகை மற்றும் தலைமை அலுவலகத்தின் முன்பக்க உருக்கு கட்டமைப்புசார் பகுதி நிர்மாணிப்பதற்காக ரூபா 9,345,249 தொகையாக மொத்தம் ரூபா 13,151,787 இற்கான தொகையொன்று 2024 ஆண்டின் போது தீர்க்கப்பட்டுள்ளதுடன், இங்கு காட்டப்பட்டுள்ள மீதித் தொகையாகிய ரூபா 1,333,912 இற்கான தொகை தலைமை அலுவலகத்தின் உருக்கு கட்டமைப்புசார் பகுதிக்காக காணப்படுவதுடன், 2025 ஆண்டில் வேலை மீதி வேலைகளை பூர்த்தி செய்ய பின்னர் மீதித் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 549,966 தொகை பெறுமதியான 96,596 பொலி பிரொபலின் பைகள் இறுதிக் இருப்புக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். 2024.12.31 திகதியில் உள்ளவாறு மயிடா ஆய்வுகூடத்தில் மீதியாக காணப்பட்ட 549,966 பொலி பிரொபலின் பைகள் இருப்பு தவறுதலாக இறுதிக் கணக்குகளில் பதிவு செய்ய முடியாமல் போனது. 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது 2025.01.01 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் மூலம் இந்தத் தவறு திருத்தப்படும் என.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2024 ஆண்டின் தேங்காய் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கால்நடைத் தொழுவத்துக்குரிய நிர்மாண வேலைச் செலவாகிய ரூபா 633,106 தொகை அதற்கான இரண்டு கால்நடைகள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தியிருந்த ரூபா 325,000 தொகையினை கணக்கீடு செய்யாமையால் சபையின் நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 633,106 தொகையினால் மற்றும் இனவிருத்திச் சொத்துக்கள் ரூபா 325,000 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த செயற்திட்டம் உட்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கால்நடைத் தொழுவம் மற்றும் இனவிருத்திச் சொத்துக்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கால்நடைகளின் பெறுமதி 2025 வருடாந்த கணக்குகளில் மூலதனப்படுத்தப்பட்டு சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், இந்த சொத்துக்கள் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் காணப்படுவதனால் அதன் பொருட் பதிவேட்டிலும் உட்படுத்தும் படி மு/3/181/இன்வென்ட்ரி/பொது இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்கின்றேன்.	கட்டிடங்களின் நிர்மாணிப்புச் செலவுகளை மற்றும் இனவிருத்தி சொத்துக்களை கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 72,207,279 தொகைக்கான பொலிப் பைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 58,597,204 தொகை என காட்டப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டிற்கான செலவு ரூபா 13,610,075 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2023.12.31 திகதியில் உள்ளவாறு தென்னங்கன்று நாற்றுமேடை மற்றும் நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகில் மீதியாக இருந்த பொலிப் பைகளின் இருப்பின் பெறுமதியை, பெறுமதி மதிப்பீடு செய்யும் போது 2022 ஆண்டிற்குரிய பெறுமதிக்கு (ரூபா 29.70) மதிப்பீடு செய்தமையால் 2024.01.01 திகதியில் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட மீதி பொலிப் பைகள் இருப்பின் பெறுமதி ரூபா 21.46 தொகை குறைவாக 2024 செலவிற்கு பதியப்பட்டிருந்தமையால் இந்த வழு ஏற்பட்டிருந்தது.	பொலிப் பைகளின் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொலிப் பைகளின் பெறுமதி ரூபா 53,726,529 தொகை எனினும், ரூபா 4,269,317 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், பொலிப் பைகளின் இறுதிப் இருப்புப் பெறுமதி ரூபா 49,457,212 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன். 2024.12.31 திகதியில் உள்ளவாறு நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகில் மீதியாக காணப்பட்ட 630,000 பொலிப் பைகளின் பெறுமதி தவறுதளாக இறுதி இருப்புக்களில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன், 2025 நிதிக்கூற்றுக்களின் மூலம் முன்னைய ஆண்டின் சீராக்கல்களின் கீழ் சரி செய்யப்படும். மேலும், தென்னங்கன்று நாற்று மேடைகளில் 2024.12.31 திகதியில் உள்ளவாறு மீதி பொலிப்பைகளின் இருப்புப் பெறுமதியாகிய ரூபா 29,333,267 இற்கான பெறுமதியினை தலைமை அலுவலப் பேரேட்டில் பதிவு செய்யும் போது குறியீட்டு இலக்கம் மாறியமையால் நாற்று மேடை பேரேட்டில் பரிக்கப்பட்ட தேங்களின் மீதியிருப்பு கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இநத வழுவின் காரணமாக நாற்று மேடை இலாபத்திற்கு எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. 2025.01.01 திகதியில் உள்ளவாறு இந்த தவறு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொலிப் பைகளின் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையிடம் காணப்பட்ட தேங்களின் பெறுமதி ரூபா 1,571,237 தொகை எனினும், ரூபா 30,904,504 தொகை என கணக்கீடு செய்யபட்டமையால், இறுதி தேய்காய் இருப்பின் பெறுமதி ரூபா 29,333,267 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2024.12.31 திகதியில் உள்ளவாறு தென்னங் கன்று நாற்று மேடைகளில் மீதி பொலிப்பைகளின் இருப்புப் பெறுமதியாகிய ரூபா 29,333,267 இற்கான பெறுமதியினை தலைமை அலுவலப் பேரேட்டில் பதிவு செய்யும் போது குறியீட்டு இலக்கம் மாறியமையால் நாற்று மேடை பேரேட்டில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் மீதியிருப்பு கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இநத வழுவின் காரணமாக நாற்று மேடை இலாபத்திற்கு எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. 2025.01.01 திகதியில் உள்ளவாறு இந்த தவறு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தேய்காய் இருப்பின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஊ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 623,700 தொகை பெறுமதியான வேப்பெண்ணெய் இறுதி இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை.	வெள்ளை ஈக்களின் சேதத்தை முகாமைத்துவப் படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த வேப்பெண்ணெய்யை பிரதேச அலுவலகங்களின் தேவையின் மீது நாடு பூராகவும் அமைந்துள்ள பிரதேச அலுவலகங்களுக்கு வினியோகிக்கப்பட்டது. அவற்றை கொள்வனவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை செலவு என கணக்கீடு செய்யப்பட்டது. எனினும், வெள்ளை ஈக்களின் சேதம் ஓரளவு கட்டுப்பட்டமையால் இந்த எண்ணிக்கை பயன்படுத்தப்படாமல் மீதியாக காணப்பட்டது. அந்த வேப்பெண்ணெய் எண்ணிக்கையை 2025 ஆண்டின் போது வடமாகாணத்தை மையமாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற தேங்காய் இரு வாரம் இற்காக பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டது. அதன்படி, 2025 ஆண்டில் அந்த எண்ணிக்கை செலவொன்று என உட்படுத்தப்படவில்லை. அதன்படி, 2025 ஆண்டு அந்தத் தொகை செலவு என உட்படுத்தப்படவில்லை. அதன்படி, 2024 ஆண்டின் போது ஏற்பட்ட கணக்கீட்டு வழுவின் மீது 2025 ஆண்டின் மிகைக்கு எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.	வேப்பெண்ணெய் இறுதி இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்குச் சொந்தமான குளியாப்பிட்டி, கேகாலை, கழுத்துறை, மாத்தறை, மாத்தளை ஆகிய பிராந்திய அலுவலங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் நிர்மாணிப்பட்டுள்ள 2 ஏக்கர் 01 ரூட் 34.4 பர்சஸ் இற்கான காணிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை.	அப்போது சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான செலவுகள் தொடர்பாக மொத்த மதிப்பீடொன்று வழங்கும் படி அரச பிரதான பெறுமதி மதிப்பீட்டாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. மொத்த மதிப்பீடு கிடைத்த பின்னர் அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் அறிவுரை	குளியாப்பிட்டி, கேகாலை, கழுத்துறை, மாத்தறை, மாத்தளை ஆகிய பிராந்திய அலுவலங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும்.

		பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என *அறி*விக்கின்றேன்.	
(ஏ)	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 274,553,043 தொகைக்கான மீள்நிதியாக்கல் கடன் மீதியின் கீழ் 05 நிதி நிறுவனங்களினால் சபையில் வைப்புச் செய்ய வேண்டிய பிணை அணவலுக்காக 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் வைப்புச் செய்திருக்காத ரூபா 1,314,286 தொகை கணக்கீடு செய்திருக்காததுடன், அதன் காரணமாக பெற வேண்டிய பிணை அணவல் மற்றும் பிணை அணவல் நிதியம் ரூபா 1,314,286 இனால் குறைவடைந்திருந்தது.	பிணை அனவல் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பங்குகொள்ளல் நிதி நிறுவனங்களினால் கப்ருக முதலீட்டு பிணை அணவல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிணை அணவல் வருடாந்த கொடுப்பனவு நிலவுகின்ற உண்மையான கடன் மீதியில் (வங்கியில் உண்மையாக காணப்படும் நலன் பெறுவோர் கடன் மீதியின் மீது) 0.5% என தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிணை அணவல் கணக்கிற்கு அனுப்ப வேண்டும். அவ்வாறாயினும், நிதி நிறுவனங்களினால் பிணை அணவல் தவணைக் கொடுப்பனவின் முறைசாரா தன்மையினால் தொடர்ந்து வரும் ஆண்டின் பிணை அணவல் தவணை வருடாந்தம் ஜனவரி 15 திகதிக்கு முன்னர் தென்னைப் பயிச்செய்கை சபையின் பிணை அணவல் கணக்கிற்கு அனுப்பப்படாத சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது. இது தொடர்பாக நிதி நிறுவனங்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, 2025 ஆண்டிற்கான வருடாந்த பிணை அணவல் தவணை நிலுவைத் தொகை அனேமான நிதி நிறுவனங்களினால் ஜனவரி மாதத்தில் பிணை அணவல் கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால், இந்தச் சிக்கல் எதிர் காலத்தில் தவிர்ந்துகொள்ள முடியும் என உறுதியாகின்றது.	குறிப்பிட்ட நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு பெற வேண்டிய தொகையினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு		இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆகஸ்ட் 13 திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 25(2)	நிலையான வைப்பொன்றில் பணம் முதலீடு செய்வதற்கு முன்னர் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அங்கீகாரம் ஒன்றின்றி மீளாய்வாண்டின் போது மஹயாய கப்துருபாய வர்த்தக நிலையத்தினால் ரூபா 6,500,000 தொகை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்திருந்தது.	இந்த நிலையான வைப்பின் பெறுமதி ரூபா 6.5 மில்லியன் என திருத்தப்பட வேண்டியதுடன், மஹாயாய மாதிரி தென்னம் தோப்புக்கு இணைந்து நடாத்திச் செல்லப்படுகின்ற கப்துருபாய வர்த்தக நிலையம் தொடர்பாக நடைமுறைக் கணக்கில் 2024.01.23 திகதி அளவில் ரூபா 6.5 மில்லியனிற்கான மிகைப் பணமொன்று காணப்பட்டதுடன், இந்தப் பணத்தை தொடர்ந்தும் நடைமுறைக் கணக்கில் வைத்திருப்பதன் மூலம் கிடைக்கூடிய முதலீட்டு வருமானத்தை இழப்பதனால் 2024.01.23 இல் நடைபெற்ற 621 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் இந்தப் பணத்தை முதலீடு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. FM/FD/Kapthurupaya-MAH 2025.06.05 திகதிய கடிதத்தின் மூலம் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுச் செயலாளரினால் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் திறைசேரி அங்கீகாரம்	அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

			வேண்டப்பட்டது.	
(ஆ)	2022 மே 10 திகதிய உள்ளக சுற்றறிக்கை இலக்கம் CCB/CR/lu/CMC & ND/2022-01	சபையின் தேங்காய் தோப்புக்களில் விழுகின்ற தென்னை அறுவடை மொத்த விளைச்சலில் 10 சதவீதத்தை மிகைக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபையினால் நடாத்தப்படுகின்ற மாதிரி தேங்காய் தோட்டங்களில் விழுகின்ற தேய்காயின் எண்ணிக்கை 12 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் இடைப்பட்டுக் காணப்பட்டது.	2025.05.27 திகதி நடைபெற்ற 634 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக அனுப்பப்பட்டிருந்த பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக மாதிரி தென்னந் தோட்டங்களில் தேங்காய் பறிக்கும் போது தற்போது காணப்படுகின்ற மாதாந்த அறுவடையை இரத்துச் செய்து 45 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் பரிப்பதற்கு மற்றும் அவ்வாறு 45 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் பரிக்கும் போது விழக்கூடிய தேங்காயின் அளவு 10 சதவீத மட்டத்திலிருந்து 20 சதவீதம் வரையான உச்ச மட்டம் வரை அதிகரிப்பதற்காக 06 மாத காலம் கண்காணிப்புக் காலத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, எங்கள் சபைக்கு உரித்தான மாதிரி தேங்காய் தோட்டங்களில் விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை 20 சதவீத வரையறையில் பேணிச் செல்லப்படுகின்றது.	உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(இ)	2020 ஜனவரி 27 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரிவு 02, அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இல் பந்தி 2.3 மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023	தென்னை பயிர்ச் செய்கை சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 59,650 இற்கான மாதாந்த கொடுப்பனவொன்றுடன், ஒதுக்கப்பட்ட வாகனம் மற்றும் ஒரு மாதத்திற்கு 115 லீற்றர்கள் எரிபொருள் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மாதாந்த கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு,	பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் MPI/Admin/12/BM/CCB (Temp) 2 இலக்கம் மற்றும் 2022.10.12 திகதிய கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட தென்னை அபிவிருத்தி சட்டத்தின் A(1) கீழ் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்காக நியமனம் ஒன்று சட்டத்தின் 10.2(ix)அ பிரிவின் படி	குறிப்பிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் கடிதத்தின் படி அங்கீகரிக்கப்பட்டிருக் காத நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்காக நியமனம் மேற்கொள்ளக் கூடாது.

	மார்ச் 20 திகதிய இலக்கம் PED/P/02/15 (i) temp 3 கொண்ட கடிதம்	இணைக்கப்பட்ட சாரதியின் மேலதிக நேரம் மற்றும் இணைந்த படி என ரூபா 948,394 தொகை செலுத்தப்பட்டிருந்தது.	மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 இன் பிரிவு 02 இன் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவு ஒன்றும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கை 22/99 மற்றும் 1999.10.08 இன் 1:1:6 (iii) உப பிரிவின் படி உத்தியோகபூர்வ வாகனமொன்று இணைக்கக்கூடிய இயலுமையொன்று காணப்படுகின்றமையால் குறிப்பிட்ட நியமனம், படி மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் வழங்குவதற்கு அமைச்சு போலவே பணிப்பாளர் சபையின் அறிவுரையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் 2024.09.11 திகதி முதல் சேவையிலிருந்து விளகியுள்ளார்.	
(ஈ)	தாபனக் கோவையின் XXVIII அத்தியாயம் பிரிவு 1.3	அனைத்து அரச அலுவலகங்களிலும், தினவரவுப் பதிவேடு வைத்திருக்க வேண்டிய போதிலும், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் தமது வட்டார அலுவலகத்திற்கு செல்லும் நாட்களில் உள்வரவு மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்வதற்காக தினவரவு பதிவேடொன்று காணப்பட்ட போதிலும், அந்தப் பதிவேட்டில்	தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கள உத்தியேகத்தர்களாக காணப்படுவதுடன், திங்கட் கிழமை அவர்களின் அலுவலக நாளாகும். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற முன் நிகழ்ச்சித் திட்ட அறிக்கையின் படி களக் கடமை தொடர்பாக மற்றும் அலுவலக நாள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட போதிலும், அலுவலக	தாபனக் கோவையின் பிரிவுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	கையொப்பமிடுவது உத்தியோகத்தரினால் புறக்கணிக்கப்பட்டிருந்தது.	நாளில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லலை பதிவு செய்வதற்காக தினவரவுப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். சில பிராந்திய அலுவலகங்களில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் அந்தப் பதிவேடு உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை என அறிந்திருந்த போதிலும், கடிதத்தின் பிரகாரம் பிராந்திய முகாமையாளர்களினால் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளவாறு எதிர் காலத்தில் அனைத்து தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் தமது அலுவல்கத்திற்கு உள்வருதல் மற்றும் வெளிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பிராந்திய முகாமையாளரினால் அது தொடர்பாக சரியான கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்படும் என உறுதிப்படுத்த முடியும்.	
(உ) அரச நிதிப் பிரமாணக் கோவை			
(i) நி.பி. 102	சபையின் பிரதான களஞ்சியத்திற்கு பொறுப்பாக 2021.10.25 திகதி முதல் 2023.07.24 திகதி வரை கடமையாற்றி ஊழியர் ஒருவரினால் ரூபா 16,663,700 தொகை கிரயத்தையுடைய 37 டெல் மடிக் கணினிகள், 39 டயனா புக் மடிக் கணினிகள் மற்றும் 24 டெப்கள் ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் பிராந்தி அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுட	இந்த காணாமல் போயிருந்த 04 மடி கணினிகள், 01 டப் இயந்திரம் பயன்படுத்தப்படாத புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட விடயமாக காணப்படுவதுடன், அந்த காணாமல் போனதை அந்த ஊழியரினால் குற்றத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தினால் சந்தை பெறுமதியை செலுத்துவதற்கு இணங்கியமையால் நி.பி.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	ன், 2022 ஆண்டின் போது பண்டக் கணிப்பீட்டின் ரூபா 910,800 தொகை பெறுமதியான 04 மடிக் கணனிகள், டெப் இயந்திரமொன்றின் குறைவொன்று அறிவிக்கபட்டிருந்த போதிலும், அது தொடர்பாக விசாரணையொன்று நடாத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக இந்த இயந்திரங்களின் தற்போதைய பெறுமதி ரூபா 1,071,555 தொகை என பெறுமதி மதிப்பீடு செய்து ஊழியரின் சம்பளத்தில் இருந்து மாதாந்தம் ரூபா 15,000 தொகை வீதம் அறவீடு செய்யும் முறையொன்று முகாமைத்துவத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. இந்த 05 பொருட் பதிவேட்டு விடயங்களும் காணாமல் போய் 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பண்டங்கள் காணாமல் போதல் தொடர்பாக பொறுப்பு தம்மாள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதென ஊழியரினால் அறிவிக்கப்பட்ட போதிலும், ஊழியருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விசாரனை மேற்கொள்ளும் தேவைப்பாடொனறு ஏற்படவில்லை. அதன்படி, மொத்த சந்தைப் பெறுமதி தற்போது சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டு வருகின்றதென குறிப்பிடுகின்றேன்.	
(ii) நி.பி. 571	தலைமை அலுவலகத்தில் ரூபா 3,533,782 தொகைக்கான பாதுகாப்பு வைப்பு 4 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தீர்க்கபடாமல் மற்றும் வருமானததிறகு எடுக்கப்படாமல் காணப்பட்டது.	பொலன்னறுவை சுற்றுலா விடுதி, யாழ்ப்பாணம் வலைய அலுவலத்திலும் மாத்தளை வலைய அலவலகத்திலும் நிர்மாண வேலை அலுவல்களுக்குரிய தடுத்து வைத்தல் பணத்தின் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டமையால் அந்தப் பணம் தற்காலிகமாக தடுத்து	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

			வைக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் பீஈடி 01/2021 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.6	அரச நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2024 ஆம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காள்வாளர் தலைமை அதிபதிக்கு 2025 ஏப்ரல் 30 திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	இனிமேல் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவி ஒரு வருடத்திற்கு மிகையான காலம் வெற்றிடமாக காணப்படுகின்றமையால், ஒவ்வொரு பிரிவுகளையும் இணைத்தளில் வசதியீனங்கள் ஏற்பட்டது.	அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவுகளின் படி தொடர்ந்து வரும் ஆண்டின் பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 105,537,456 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 62,743,429 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 168,280,885 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது அமைச்சிலிருந்து பெறுவனர்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 72,857,261 இனால் மற்றும் ரூபா 502,087,198 தொகையினால் குறைவடைதலும், விஷேட செயற்திட்டச் செலவுகள் மற்றும் நாற்றுமேடைச் செலவுகள் முறையே ரூபா 69,905,992 தொகையினால் மற்றும் ரூபா 681,334,302 தொகையினால் குறைவடைதலும் இந்த அதிகரிப்புக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் வருமானங்கள் மற்றும் செலவு விடயங்கள் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்து கீழே காட்டப்பட்டுள்ளது.

விடயம்	2024 (ரூபா)	2023 (ரூபா)	முரண் (ரூபா)	முரணின் சதவீதம் நுற்றிற்கு
வருமானனங்கள்				
திறைசேரிப் பெறுவனவுகள்	1,137,500,000	975,528,021	161,971,979	17
அமைச்சுப் பெறுவனவுகள்	61,369,025	134,226,286	(72,857,261)	(54)
ஏனைய வருமானங்கள்	914,597,911	1,416,685,109	(502,087,198)	(35)
செலவுகள்				
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட செலவுகள்	476,446,085	472,040,263	4,405,822	1
விஷேட செயற்திட்ட செலவுகள்	44,538,842	114,444,834	(69,905,992)	(61)
சம்பளங்கள் மற்றும் படிகள்	479,065,710	456,066,871	22,998,839	5
நாற்று மேடைச் செலவுகள்	278,615,493	959,949,795	681,334,302	71
பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானச்	138,136,584	82,647,065	55,489,519	67

செலவு கப்ருக முதலீட்டு நிதியச் செலவுகள்	22,956,408	28,054,451	5,098,043	18
ஏனைய செலவுகள்	151,676,341	119,910,849	31,765,492	26

2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் திடீர் சொத்து விகிதாசாரம் 9:1 மற்றும் 6:1 தொகையாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது அந்த விகிதாசாரம் 7:1 மற்றும் 5:1 ஆக காணப்பட்டது. 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது இருப்பு முறையே ரூபா 514,593,147 தொகை மற்றும் ரூபா 618,452,497 தொகையும், குறுகிய கால முதலீடுகள் முறையே ரூபா 904,068,523 தொகை மற்றும் ரூபா 639,215,445 தொகையும் காணப்பட்டதால் நடைமுறை மற்றும் திடீர் சொத்துக்கள் அதிகரிப்பதற்கான பிரதானமான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைததுவ திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2023 ஜூலை 06 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்டிருந்த 09 பரிந்துரைகளில் கீழ்வரும் 06 பரிந்துரைகள் செயற்படுத்தியிருக்கவில்லை.		
(i) வெள்ளை ஈயின் சேதத்தை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை 02 வாரங்களில் 2023 ஜூலை 20 திகதிக்கு முன்னர் அரச தொழில் முயற்சிகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வெள்ளை ஈக்கள் போன்ற அவசர இடர் நிலைமைகளை முகங்கொடுப்பதற்காக நிறுவப்பட்டிருந் இடர் முகாமைத்துவ நிலையத்திற்காக தேவையான ஏற்பாடுகள் அவசரமாக வழங்குவதற்காக பாதுகாப்பு நிதியம் ஒன்று நிறுவுவதற்கு பெருந்தோட்டத் தொழில் அமைச்சினால் வேண்டப்பட்டிருந்ததுடன், அதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுப் பணிப்பாளர் (திட்டமிடல்) இன் இலக்கம் MAPI/PD//PLN/04/Project Pro/Coco மற்றும் 2024.08.26 திகதிய கடிதத்தின் மூலம் இணைந்த நிறுவனத்திற்காக எதிர்பார்க்கப்படாத இடர் நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்காக அமைச்சில் நிதியமொன்று தடுத்து வைப்பதற்கு திறைசேரியினால் அங்கீகாரம்	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.

		கிடைக்கப் பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக தென்னை பயிர்ச் செய்கையின் இடர் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்காக முன்மொழிவொன்று அமைச்சின் அறிவுரையின் படி, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் செயற்திட்ட முன்மொழிவு சமர்ப்பதற்கும் படிவத்தின் படி தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பிக்கபட்டது. அதற்காக இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதன்படி, பொருத்தமான பாதுகாப்பு நிதியமொன்று நிறுவுவதற்காக ஏற்பாடொன்று பெற்றுக்கொள்வதற்கான இயலுமையொன்று கிடைத்திருக்கவில்லை.	
(ii)	தென்னை பயிர்ச் செய்கையுடனான காணிகளை துண்டுகளாக்குவதை தடுப்பதற்காக உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுத்து 02 வாரங்களுக்குள் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிவிக்கும் படி அமைச்சுச் செயலாளருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவிலலை.	தென்னை பயிர்ச் செய்கையுடனான காணிகளை துண்டுகளாக்குவதை தடுப்பதற்காக உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுத்து 02 வாரங்களுக்குள் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிவிக்கும் படி அமைச்சுச் செயலாளருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும, அதற்காக அமைச்சுச் செயலாளர் செயற்பட்டாரா என சபைக்கு அறிவித்திருக்கவில்லை. இது தொடர்பாக தென்னை பயிர்ச் செய்கை சபையின் பொது முகாமையாளரின் இலக்கம் EXT/DEV/FSD/13-(தொகுதி IV) கொண்ட 2025.05.20 கடிதத்தின் மூலம் மேற்கூறிய பிரச்சினை தொடர்பாக கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கும் படி அமைச்சிடம் வேண்டப்பட்டது. எனினும், அமைச்சினால் இதுவரை குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக பதிலனுப்பியிருக்கவில்லை.	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.

(iii)	நீர்க்கொழும்பு விதை தேங்காய் அலகுக்காக புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பத்றகாக ரூபா 2,149,974 தொகை உசாத்துணை கம்பனிக்கு 2016 ஆண்டு சேவை வழங்குவதற்கு முன்னர் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக விரிவான அறிக்கையொன்று ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்கும் படி அமைச்சுச் செயலாளருக்கு வழங்கப்பட்ட பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகில் கட்டிட திருத்த வேலை நீர்கொழும்பு மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் திருத்த வேலை அலுவல்கள் உசாத்துணை கம்பனியொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், நீர்கொழும்பு விதை உற்பத்தி அலகின் கட்டிடத் திருத்த வேலை கருமங்கள் தொடர்பாக இதுவரை உசாத்துணை கட்டணம் ஏதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த கணக்காய்வு ஐயவினா தொடர்பாக அமைச்சிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அமைச்சினால் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு அறிவித்தல் ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. இது தொடர்பாக எதிர் காலத்தில் அமைச்சிடம் வினவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.
(iv)	திறைசேரி அங்கீகாரம் இன்றி தென்னை பயிர்ச்செய்கை சபையின் 27 சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு ரூபா 17,186,549 தொகை தொழிலாளர் கொடுப்பனவு என வழங்கியிருத்தல் தொடர்பாக அமைச்சுச் செயலாளருக்கு நி.பி. 119 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவீடு செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த தொழிலாளர் கொடுப்பனவு மீண்டும் அறவீடு செய்வதை தடுப்பது தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினரினால் அந்த கொடுப்பனவை மீண்டும் 2023.07.04 திகதி அறவீடு செய்வதை தடுப்பதற்காக நீதிமன்றத்தில் CA (Writ) 23/214 இலக்கம் கொண்ட வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இலக்கம் CA/CA/510/2023(R) மற்றும் 2023.09.08 திகதிய கடித்தின் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எதுவித கழித்தலும் மேற்கொள்ளக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக அமைச்சினூடாக சட்டமா அதிபர்	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.

		திணைக்களத்திற்கு தற்போதைய நிலைமை தொடர்பாக வினவுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக கிடைத்த கடிதத்தின் படி இந்த வழக்கு 2025.06.30 திகதி விசாரணை செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு தற்போது சாட்சிகள் விசாரிக்கும் கட்டத்தில் காணப்படுகின்றதெனவும், விவாத கட்டத்திற்கு வந்திருக்கவில்லை எனவும், தற்போது வழக்கை நடாத்தும் பெண் சட்டத்தரணியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. தென்னை பயிர்ச்செய்யும் சபைக்கு நீதிமன்றத்தினால் இதுவரை அழைப்பேதும் விடுக்கப்பட்டிருக்கவிலலை.	
(v)	தென்னை அபிவிருத்தி மக்கள் தோட்ட அமைச்சுக்கு 02 தனியார் கம்பனிகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 6,573,572 தொகை அறவிடப்படாமல் காணப்பட்டது. இந்த தொகையினை அறவீடு செய்வதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்து ஒரு மாதத்தினுள் குழுவிற்கு அறிவிக்கும் படி அமைச்சுச் செயலாளருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2025 ஜூன் 24 திகதிய சபையின் தலைவரினால் அனுப்பியிருந்த பதிலின் படி 2022 ஆண்டில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு பதிவழிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், 2023 ஜூலை 06 திகதி நடைபெற்ற அரச தொழில் முயற்சிகள் குழுவும் அது பற்றி தெரிவித்திருக்கவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் அறிவுரையின் படி 2014 ஆண்டு முதல் கடன்பட்டோர் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 6,573,572 தொகை பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிப்பதற்காக 2023.06.27 திகதி நடைபெற்ற 614 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு 2022.12.31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.

(vi)	தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றிய இலங்கை நிர்வாக வேவையின் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடொன்று மற்றும் அதற்கான தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த பணம் அவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், அந்தத் தொகையினை அந்த உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தற்போது சேவையாற்றும் இடத்திலிருந்து அறவீடு செய்தவற்வதற்காக அமைச்சுச் செயலாளருக்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	முன்னைய பெண் பொது முகாமையாளரின் பயன்பாட்டுக்காக வீடொன்று வாடகைக்கு எடுத்தல் தொடர்பாக பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திடம் பதில் ஏதும் அல்லது வேறேதும் முன்னேற்றங்கள் காணப்படின் அறிவிக்கும் படி வேண்டப்பட்டு அமைச்சுக்கு 2025.04.03 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் வினவிய போது அந்த நிறுவனத்தினால் பதிலனுப்பியிருந்த 2025.06.16 திகதிய கடிதத்தின் பிரதியொன்றும் அனுப்பப்பட்டிருந்தது. குறிப்பிட்ட உத்தியோகத்தர் அரச நிருவாக சேவையில் காணப்படுவதனால் தொடர் நடவடிக்கை பொது நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.	பொது முயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்த வேண்டும்.
(ஆ)	05 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த ரூபா 2,308,029 இற்கான 04 கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை.	வெஸ்டர்ன் பிரோகர்ஸ் மற்றும் டப்லியு. டீ. வாஸ் கம்பனிகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,176,375 தொகை மற்றும் ரூபா 1,042,378 இற்கான தொகை சபைக்கு செலுத்தாமை தொடர்பாக அந்த 02 கம்பனிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அந்த வழக்கு அலுவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மில்லவான பெருந்தோட்டக் கம்பனி மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் நலனோம்பு சங்கத்திடம் முறையே	கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட வேண்டும்.

		அறவிடப்பட வேண்டிய ரூபா 11,900 தொகை மற்றும் ரூபா 77,376 தொகையிற்கான மொத்தம் ரூபா 89,276 தொகை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் முன்கொண்டு வரப்படும் கணக்கு மீதியொன்றாகும். இது தொடர்பாக தகவல்கள் தேடிய போதிலும், போதியளவு தகவல்கள் கண்டறிய முடியவில்லை. அதன் காரணமாக அடுத்த கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் படி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து நிதிப் பிரமாணங்களின் படி பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	03 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,953,712 இற்கான தொகையொன்று 4 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.	ரூபா 6,683,533 நிர்மாண வேலை தொடர்பாக காணப்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக மற்றும் கொடுப்பனவு பெறுமதி தொடர்பாக காணப்படும் சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், குறிப்பிட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு உரித்தாயின் முறைப் பிரகாரம் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படும். ரூபா 267,030 தொகை தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு தேவையான பரிந்துரைகள் பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கைகள் முறைப் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலவுகின்ற சிக்கல்கள் தீர்த்துக்கொண்ட பின்னர் தடுத்து வைத்தல் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	சேவையை விட்டுச் சென்றுள்ள 42 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,044,097 இற்கான	01 – 05 வருடங்கள் வரை நிலுவையாக காணப்படுவதுடன், அவர்களுக்கு	நிலுவை ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க

	தொகையொன்று 01 வருடத்திற்கு முதல் 05 வருடங்கள் வரை நிலுவையாக காணப்படுவதுடன், அந்தக் கடனை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அறிவிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(உ)	கப்ருக முதலீட்டு கடன் திட்டம் தொடர்பாக துணை அணவல் உடன்படிக்கையின் 3.11 இன் பிரகாரம் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கியிருந்த நிதி நிறுவனங்களிலிருந்து திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீள் நிதிக் கடன் மீதிகளுக்கு 0.5 சதவீதப் பெறுமதியொன்று 2024 ஜனவரி 15 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் துணை அணவலுக்காக பேணிச் செல்கின்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்ய வேண்டும். நிதி நிறுவனங்களினால் உரிய சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்ய வேண்டிய ரூபா 2,852,955 இற்கான பிணை அணவல் பெறுமதி உடன்படிக்கையின் பிரகாரம் வைப்புச் செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக துணை அணவல் சேமிப்புக் கணக்கின் மீதியின் மீது சபைக்கு உழைக்கக்கூடியதாக இருந்த வட்டி வருமானம் ஒன்றை இழந்திருந்தது என அவதானிக்கப்பட்டது.	நிதி நிறுவனங்களினால் துணை அணவல் தவணைக் கொடுப்பனவின் முறைசாரா தன்மை காரணமாக அடுத்த வருடம் துணை அனவல் தவணைகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 15 திகதிக்கு முன்னர் தென்னை பயிர்ச் செய்கை சபையின் துணை அணவல் கணக்கிற்கு அனுப்பப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பாக வங்கி நிறுவனங்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 2025 ஆண்டிற்குரிய பிணை அணவல் தவணை நிலுவைத் தொகை அனேக நிதி நிறுவனங்களினால் ஜனவரி மாதத்தினுள் பிணை அணவல் கணக்கிற்கு வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் இந்தச் சிக்கல் எதிர் காலத்தில் தவிர்ந்து கொள்ள முடியும் என உறுதியாகின்றது.	நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஊ)	முறையான தென்னைப் பயிர்ச் செய்கை ஒன்றிற்காக 2018 ஆண்டின் போது ரூபா 1,600,000 தொகை செலவிடப்பட்டு கையடக்கத் தொலைபேசி செயலியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2025 பெப்ரவரி 03 திகதி அளவில் இறுதி நாளதுவரை ஆக்கல் என குறிப்பிடப்பட்டிருந்தது 2024 ஆகஸ்ட் 03 திகதி ஆகும். மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த மென்பொருளுக்காக தரையிரக்கத்தின் எண்ணிக்கை 10,000 இற்கு மிகையான எண்ணிக்கை என காட்டப்பட்டிருந்த	இந்த கையடக்க தொலைபேசி செயலியினூடாக தென்னை பயிர்ச் செய்கை தொடர்பாக பயிர்ச் செய்வோருக்கு அன்றாடம் வாழ்க்கைக்கு தேவைப்படுகின்ற தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாக அறிவிக்கப்படுகின்றது. இங்கு இறுதி நாளதுவரையாக்கல் 2024 ஆகஸ்ட் 03 திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு தேவையான இவ்வாறான கையடக்க	கையடக்கத் தொலைபேசி செயலி ஆக்கபூர்வமாக தகவல்கள் வழங்கும் வழியொன்றாக காணப்படுவதனால் மேலும், பிரசித்தப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட வேண்டும்.

	போதிலும், மென்பொருள் தென்னை பயிர்ச் செய்கையாளர்கள் இடையே பிரசித்தப்படுத்துவதற்கும் மற்றும் நாளதுவரையான தகவல்களை வழங்குவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளதா என சிக்கலொன்றாக காணப்பட்டது.	செயலியை நாளதுவரை ஆக்கல் அவசர நிலைமையொன்றில் அல்லது அடிக்கடி தொற்றுநோயொன்று விரைவாக பரவும் நிலைமை அல்லது ஏதேனும் விஷேட விடயமொன்று தொடர்பாக தகவல்கள் அறிவுறுத்துவதற்கு தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரமே. அதன்படி, இறுதியாக 2024.08.13 திகதி இந்த கையடக்க செயலி நாளதுவரை ஆக்கப்பட்டு அந்தக் காலத்தில் விரைவாக பரவியிருந்த வெள்ளை ஈ சேதம் தொடர்பாக பயிர்ச் செய்கையாளர்களை அறிவுறுத்துவதற்காகவேயாகும்.	
(எ)	சபையினால் நடாத்தப்படுகின்ற 12 மாதிரி தென்னந் தோட்டங்களில் குறை நிரப்பு கன்றுகள் நடல் தொடர்பாக பரிசோதனையின் போது மகயாய, போபிட்டிய, ரன்தெனிய, நாகன்சோல மற்றும் கொரை ஆகிய தென்னந் தோட்டங்களில் நடப்பட்டிருந்த கன்றுகளை விட கூடிய எண்ணிக்கையான கன்றுகள் மேலும் நடுவதற்கு நேரிட்டது. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் நடவேண்டித் தேவைப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 150 முதல் 2,537 வரையான வீச்சில் காணப்பட்டது.	மாதிரித் தென்னந் தோட்டங்களில் காணப்பட்ட பிரதேசங்களில் மழை வீழ்ச்சி மற்றும் தொழிலாளர் பெற்றக்கொள்ளும் வசதிகளின் படி ஆண்டின் போது கன்றுகள் நடுவது மேற்கொள்ளப்படுவதுடன், ஒரு ஆண்டின் போது பாரிய எண்ணிக்கையான கன்றுகள் பராமரித்தல் முடியாமையால் முறைப் பிரகாரம் கன்றுகள் நடல் மேற்கொள்ளப்பட்டது. விஷேடமாக பளை மாதிரி தென்னந் தோட்டத்தை சேர்ந்த கரந்தாய் காணிப் பகுதியில் காணியின் உரிமை தொடர்பாக காணப்பட்ட வழக்கு அலுவல்கள் காரணத்தினால் அதன் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ள முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. அதன் காரணமாக குறை நிரப்புக் கன்றுகள் நடும் கருமங்களும் தாமதமடைந்தது. தற்போது வழக்கு அலுவல்கள் முடிவடைந்தமையால் கன்றுகள் நடும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது முறைப் பிரகாரம்	குறை நிரப்பு கன்றுகள் நடுவதற்காக ஒவ்வொரு தோட்டத்திலும் குறைபாடுகளை கண்டறிந்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதியங்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், மகயாய தென்னந் தோட்டத்தில் கால்நடை வளர்ப்புச் செயற்திட்டம் (உதாரணம் - எருமை மாட்டுச் செயற்திட்டம்) நடாத்தப்படுகின்ற பரப்புகளில் கன்றுகள் நடுதல் பகுதிகளாக மேற்கொள்ளப்படுகின்றமையால், கன்று நட்டல் பூர்த்தி செய்யும் இயலுமையொன்று காணப்படவில்லை.	

3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

ஊரிய நியமத்துடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2016, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த அச்சு இயந்திரங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 675,517 இற்கான பெறுமதியுடைய 58 டோனர்கள் மற்றும் 2017 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ரூபா 26,270 இற்கான பெறுமதிக்காக கொள்வனவு செய்திருந்த 03 இலத்திரனியல் மல்டி மீடியா திரைகள் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது.	03 மல்டி மீடியா திரைகள், நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளின் வேண்டுகோளின் படி அந்த பிரிவுகளுக்கும் அம்பாறை பிரதேச அலுவலகத்திற்கும் வழங்கப்பட்டது. வழங்கல் கட்டளை இலக்கம் S/10/38,S/10/48,S/10/37 பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள டோனர் கொள்வனவு செய்யப்பட்ட காலப் பகுதியில் பயன்படுத்தக்கூடிய அச்சு இயந்திரம் நிறுவனத்தில் காணப்பட்டது. அங்கு அந்த அச்சு இயந்திரத்திற்காக தேவைப்பாட்டின் படி வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டனவாகும். கால ரீதியாக அச்சு இயந்திரங்கள் செயற்படாமை மற்றும் சிதைவடைதல் காரணத்தினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையால் இந்த இருப்பு மீதியாக இருந்தது.	தேவைப்பாட்டின் படி பண்டங்கள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ள வேண்டியதுடன், கொள்வனவு செய்த பண்டங்கள் வினியோகத்தலும் உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும்.